

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி. தென்னக ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் அவர்களை சந்தித்து, சென்னை புறநகர் ரயில் சேவையில் ஏற்பட்டுள்ள குளறுபடிகள் குறித்தும், 204 ரயில் சேவைகளுக்கு பதிலாக 115 ரயில் சேவையாக குறைத்திருப்பது பற்றியும், அதனால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும், வியாபார பெருமக்களுக்கும், தாய்மார்களுக்கும் ஏற்பட்டுள்ள சொல்லொண்ணா துயரங்கள் பற்றியும் நேரிலும் கடிதம் வாயிலாகவும் எடுத்துரைத்தார்.




நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் திருமருகல் ஒன்றியம் பனங்குடி, கோபுராஜபுரம் மற்றும் நரிமணம் ஆகிய கிராமங்களில் சி.பி.சி.எல். மறுவாழ்வு மறுகுடியமர்வு கீழ் 60 பயனாளிகளுக்கு தலா ரூ. 5,00,000 வீதம் ரூ. 3,00,00,000 இழப்பீட்டுத்தொகை வழங்கும் நிகழ்ச்சியில் பயனாளிகளுக்குபள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி காசோலை வழங்கினார். உடன் நாகை மாவட்ட ஆட்சி தலைவர் ப.ஆகாஷ் தலைமை நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகத் தலைவர் என்.கௌதமன், சட்டமன்ற உறுப்பினர்கள் முகம்மதுஷாநவாஸ், நாகைமாலி, மீனவர் அணி மாநில துணை செயலாளர் ஜி. மனோகரன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் கார்த்திகேயன், நகர கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ. செங்குட்டுவன், மகா.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பி.என்.கார்த்தி சந்தோஷ், மற்றும் பலர் உள்ளனர்.

### சிவகங்கை மாவட்டத்தில் வீடுகள்தோறும்

# முதல்வரின் தளகர்த்தர்களாக ஸ்டாலினின் மகளிர் படை பரப்புரை!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை .பிப்ரவரி 26.

தமிழக முதல்வர் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வெல்லும் தமிழ் பெண்கள் என்ற மகளிருக்கான அமைப்பினை அறிவித்து பிப்ரவரி 23ஆம் தேதிமுதல் மார்ச் 8ம் தேதி வரை 234 சட்டமன்ற தொகுதியிலும் தேர்தல் பரப்பரை மேற்கொள்ளுமாறு அறிவித்திருந்தார்.

அதன்படி சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி வெல்லும் தமிழ்ப்பெண்கள் பரப்பரை கூட்டம் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. முன்னிலையில் நடைபெற்றது . மாவட்ட மகளீரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் வரவேற்று பேசினார் . இந்த வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரையில் மானாமதுரை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஆர். கே.என்.போஸ், மாவட்ட மகளீர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் திருமதி வளர்மதி, மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கைமாறன், மானாமதுரை நகர் மன்ற தலைவர் எஸ். மாரியப்பன் கென்னடி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம் வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை குறித்து விளக்கி கூறினார். தொகுதி அளவில் வந்திருந்தமகளீரணி யினர் சார்பில் முனீஸ்வரி மாவட்ட மாணவர்அணி துணை அமைப்பாளர் ரம்யா, மரகதம் ஆகியோர் கழகத் தலைவர் முதல்வர் பெண்களுக்கு ஐந்து ஆண்டுகள் சாதனைகள் செய்ததை குறித்து விளக்கிப் பேசினார்கள். சாலைகிராமம் மரகதம் முதல்வரின் சாதனைகளை புகழ்ந்து பாடினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெல்லும் தமிழ் பெண்கள் பரப்புரை யினை துவக்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் கேஆர். பெரிய கருப்பன் பேசியதாவது.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் அறிவித்துள்ள வெல்லும் தமிழ் பெண்கள் ஸ்டாலின் படையான நீங்கள் வாக்காளர்களை அணுகும்முறை மிகவும் முக்கியமானதாக இருக்க வேண்டும் .அந்தந்த பகுதி சூழ்நிலைக்கு தகுந்தவாறு நீங்கள் தேர்தல் பணி ஆற்ற வேண்டும் .கழகத்தில் 26 அணிகள் உள்ளது. இதில் மகளிர் அணியைச் சேர்ந்த ஸ்டாலின் மகளிர் படை தனி அணியாக இம்மாதம்23ஆம் தேதி முதல் மார்ச் 8ஆம் தேதி வரை பரப்புரை செய்ய உள்ளீர்கள் .கழக அரசின் ஐந்து ஆண்டுகால சாதனைகள் நமது கழக அரசு இதுவரை செய்துள்ள மகளிருக்காண திட்டங்களை நீங்கள் கிராமங்கள் தோறும் வீடுவீடாக சென்று விளக்கி கூற வேண்டும். தினசரி 20 நபர்களை சந்தித்தாலே போதும் ..அவர்களிடம் நாம் நமது அரசின் சாதனைகள் ,தொடர்ந்து கழக தலைவர் அவர்கள் எதிர்காலத்தில் நமக்கு செய்யவிருக்கும் திட்டங்களை எடுத்து கூறி வாக்குகளை சேகரிக்க வேண்டும். உங்களுக்கு தகவல் தொழில்நுட்ப அணி ,பி.எல்.ஏ ஆகியோர் உதவி செய்வார்கள். இந்த பரப்புரை யானது கழகத் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதல்வர் பதவி ஏற்றதும் உள்ளாட்சி தேர்தலில் நீங்கள் அதிகளவில் பங்கு வருவதற்கான ஒரு பயிற்சியாக அமைய உள்ளது . மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் 16,000 பேர் வெல்லும் தமிழ் பெண்கள் அணியில் உள்ளார்கள். இவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் 4 சட்டமன்ற தொகுதியிலும் சீருடை யுடன் சென்று முதல்வரின் திட்டங்களை குறிப்பாக மகளிருக்கான திட்டங்களை தெரிவித்து வாக்கு சேகரிக்க வேண்டும். உங்கள் பயணம் ஒவ்வொன்றும் வெற்றி பயணமாக அமைய வேண்டும். ஒவ்வொரு வாக்களார்களையும் தவறாமல் நேரில் சந்திக்க வேண்டும். ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையில் நமது பணி சிவகங்கை மாவட்டத்தில் எல்லோரும் பாராட்டு வகையல் அமைந்தது . அதேபோல் வெல்லும் தமிழ் பெண்கள் நிகழ்ச்சி கழகத் தலைமை முதல்வர் மற்றும் அனைவராலும் பாராட்டப்படும் வகையில் அமைய வேண்டும்.. .இதற்கான பணிகளில் உங்களுக்கு மாவட்ட கழகம் உறுதுணையாக நிற்கும் .முதல்வரின் படை கர்த்தர்களாக நீங்கள் செல்கிறீர்கள் . பா.ஜ.கவின் பின்னால் சென்று கொண்டிருக்கும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பொய்யான தவறான வாக்குறுதிகளை அளித்து வருகிறார். அவரால் எந்த திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது. ஆனால் நம்முடைய கழக தலைவர் அறிவிப்புக்கு வேல்யூ உண்டு. மக்களும் நம்மை நம்புகிறார்கள். நம்மை யாரும் இம்முறை கேள்வி கேட்க முடியாது. கேள்வி கேட்டாலும் அதற்கான பதில் நம்மிடம் உள்ளது . ஏனென்றால் கடந்த ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் நாம் செய்துள்ள திட்டங்கள் அவ்வளவு உள்ளது.சாதனைகளை பட்டியல் போட முடியாது அவ்வளவு சாதனைகளை நாம் செய்துள்ளோம். கழகம் எந்த நிலையிலும் ,கொள்கை மாறாமல் செயல்பட்டு வருகின்றது. எந்நிலையிலும் தன் நிலை மாறாத இயக்கமாக கழகம் விளங்கி வருகின்றது. பேரறிஞர் அண்ணா , தலைவர் கலைஞர் வழியில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் கொள்கை மாறாமல் கட்சியையும் ஆட்சியையும் வழி நடத்தி வருகிறார். எடப்பாடி நேற்று முன்தினம் ரூபாய் பத்தாயிரம் கருணை தொகை வழங்குவதாக அறிவித்துள்ளார் .அவர் எவ்வாறு வழங்குவார் என்று தெரியவில்லை. முதலில் அது கருணைத் துறை என்று கூறுவது தவறாகும். பித்து பிடித்தது போல் அவர் பேசி வருகிறார். 2026சட்டமன்ற தேர்தலில் எடப்பாடி பழனிசாமி வெற்றிபெற முடியாது என்று அவருக்கு தெரிந்து விட்டது. இதற்காக பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசி வருகிறார். அவரால் எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாது. அ.தி.மு.க. பா.ஜ.க .கூட்டணியில் ஒற்றுமை இல்லை .குழப்பம் நிலவுகிறது .டி.டி.வி தினகரன், பா.ஜ.க . தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றுள்ளதாக கூறுகிறார்.

அ.தி.மு.க. பெயர் கூற விரும்பவில்லை கூட்டணியில் கைகோர்த்ததுடன் அவர்கள் உள்ளார்கள். அந்த கூட்டணி சிக்கலில் தவித்துவருகிறது. அவர்கள் கூட்டணியே உட்கட்சி பூசலால் சிக்கி தவிக்கிறது. அந்த கூட்டணி மிகவும் குழப்பத்தில் உள்ளது.இந்த நிலையில் சசிகலா வேறு தனி கட்சி துவங்கியுள்ளார். மேலும் தேர்தலில் தோல்வியுறுவோம் என்று தெரிந்தே

டிடி..வி. தினகரன் அண்ணாமலை ஆகியோ ர் தேர்தலில் போட்டியிடவில்லை என்று கூறியுள்ளார்கள். குழப்பத்தின் உச்சத்தில் அ.தி.மு.க .பா.ஜ.க கூட்டணி உள்ளது. நாம் நமது கழக அரசின் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களை மக்களிடம் எடுத்துக் கூறி நமது வெற்றியை நோக்கி செல்ல வேண்டும். இரண்டாவது முறையாக முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்கள் முதல்வராவது உறுதி. ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைப்பது உறுதி. அதற்கேற்ப நாம் நமது பணிகளை செய்திட வேண்டும் .

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், மகளிர் அணி நிர்வாகிகள் மார்க்ரெட்கமலா, திலகவதி கண்ணன் ,சண்முகப் பிரியா, பாக்கியலட்சுமி விஜயகுமார் ஒன்றிய செயலாளர்கள் துரை. ராஜாமணி,அ.முத்து சாமி, மா . அண்ணாத்துரை , வசந்தி சேங்கைமாறன் ஆறு. செல்வராஜன், எம் .ஏ .கடம்பசாமி, வே. தமிழ்மாறன், கா. வெங்கட்ராமன் , பொதுக்குழு உறுப்பினர் ஏஆர்.ஜெயமூர்த்தி,

பேரூர் கழக செயலாளர்கள் பி.ஏ.நஜுமுதீன், நாகூர் கனி, முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை ,நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம், தகவல் தொழில்நுட்ப பணி துணை அமைப்பாளர் சுப.அன்பரசன், கண்ணன், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார் , நிர்வாகிகள் ரவிச்சந்திரன் , பாஸ்கரன் ,மாரி, கார்த்தி, மலைமேகு, காளிமுத்து, மோகனசுந்தரம்,, மற்றும் ஏராளமான மகளிர் அணியினர் கலந்து கொண்டார்கள்.


### தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 365 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 1600 mm Butterfly valve with worm gear box assembly for cooling water pumps |
| 367 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | High Precision Electrical Actuator for BFP 3A Scoop control |
| 368 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Drive Shaft assembly for Cooling water pumps |
| 369 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | CWP Discharge line SS 316 spool piece for BFV side |
| 370 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Thrust pad for Cooling Water Pumps |
| 372 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Spares for Boiler Feed pump |
| 373 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Hydraulic air oil cooler for ECHS Reclaimer stacker and conveyors |
| 304 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Supply of Stop log gate with seals for isolation of fore bay of CWPs in unit 1 and 2 of CWPH |
| 306 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of spares for 600 MW TDBFP Drive Turbine MCV for Unit I |
| 307 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Procurement of S188 model plate heat exchangers channel plate for SG PHE 2E |
| 311 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-2 | Supply of Lance pipe with nozzle for LRSB suitable for unit 1 and 2 600 MW Boiler |
| 374 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 300 NB Seamless pipes for service water overflow line system |
| 375 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | Various sizes of seamless pipes MS Flanges |
| 376 | மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி-1 | 300 NB Seamless pipes for service water drawal line system |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tntenders.gov.in/nicgep/app, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/1399/ஒப்பந்தப்புள்ளி/2026


### வாக்குறுதியை நிறைவேற்றிய திராவிட மாடல் அரசு:

# ராசிபுரத்தில் நிரந்தர பட்டுக்கூடு ஏலம் மையத்தால் விவசாயிகளுக்கு நேரடி பலன்! புதிய பொருளாதார எழுச்சி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி பெருமிதம்!



நாமக்கல், பிப் 26-

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் வட்டம் ஊனவேலம்பட்டி பஞ்சாயத்து ஆணைகட்டிபாளையம் பகுதியில் வட்டு விவசாயிகள் நலன் கருதி சுமார் 6000 சதுரடி பரப்பளவில் ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகம் பாராளு மன்ற உறுப்பினர் கே.ஆர். என். இராஜேஸ்குமார் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ 2 கோடியே 20 லட்சம் மதிப்பில் ராசிபுரம் அரசு பட்டுக்கூடு அங்காடி திறப்பு விழா மற்றும் ', ரூ.50.00 இலட்சம் மதிப்பில் கல்முனை 10 100 பாகம் மற்றும் பட்டு முறுக்கேற்றம் மைய கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா மற்றும் ரூ. 75 லட்சம் மதிப்பில் 142 விவசாயிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

தொடர்ந்து ஒருங்கிணைந்த அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத்திற்கு அருகாமையில் பட்டு விவசாயிகள் அங்காடிக்கு கொண்டு வரும் பட்டுக்கூடுகளை மதிப்புக்கு கூட்டிட ஒரு எண்ணிக்கையிலான 10 பேசின்கள் கொண்ட பலமுனை வட்டு நூற்பகம் மற்றும் முறுக்கேற்றும் அலகு நிறுவிடு வதற்கான அமைத்திடும் பணிக்கு பூமி பூஜை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பட்டு வளர்ச்சித் துறை இயக்குனர் சாந்தி தலைமை தாங்கினார். இணை இயக்குனர் செ.பொன்மாரி, மண்டல துணை இயக்குனர் சி.ரெ. நிஷா, உதவி இயக்குனர் கி.நிஷாந்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழகக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்துகொண்டு புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பட்டுக்கூடு அங்காடியை திறந்து வைத்து, பேசுகையில்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம், ராசிபுரம், மோகனூர், பரமத்தி வேலூர், எலச்சிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மல்பெரி சாகுபடி மற்றும் பட்டு வளர்ப்பு தொழில் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. இப்பகுதி விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளை தர்மபுரி மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்தின் மைசூர் போன்ற பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இதனால் போக்குவரத்து செலவு மற்றும் குறைந்த விலை போன்ற பிரச்சனைகள் அவர்களுக்கு ஏற்பட்டன.

இந்நிலையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட உறுதிமொழிக்கிணங்க, 2021ஆம் ஆண்டு ஆட்சி அமைந்ததும் ராசிபுரத்தில் பட்டுக்கூடு ஏலம் மையம் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் ஆண்டுக்கு சுமார் 50 ஆயிரம் கிலோ அளவில் பட்டு ஏலம் நடைபெற்ற நிலையில், தற்போது அது ஒரு லட்சம் கிலோவாக உயர்ந்துள்ளது.

விவசாயிகள் கோரிக்கையின்படி, இஆக்சன் முறை கொண்டு வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் ரூ.2 கோடிக்கும் அதிக தொகையில் ராசிபுரத்தில் நிரந்தர கட்டிடத்துடன் கூடிய பட்டுக்கூடு ஏலம் மையம் அமைக்கப்பட்டு, கட்டிடப் பணிகள் நிறைவு பெற்று பட்டு வளர்ச்சித் துறை இயக்குனரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புதிய அங்காடி மூலம் வெளிமாநில மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்துள்ளதால், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடைக்கு நியாயமான மற்றும் அதிக விலை கிடைக்கும் சூழல் உருவாகியுள்ளது. இதனால், போக்குவரத்து செலவாக ஆயிரக்கணக்கில் செலவழிக்க வேண்டிய நிலைமையும் தவிர்க்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த மையத்தின் மூலம் சுமார் ரூ.20 கோடிக்கும் அதிக மதிப்பில் பட்டு ஏலம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், அரசு சார்பில் பட்டு நூற்பாலை மற்றும் காஸ்டிங் (Twisting) மையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு, தொகுதி வளர்ச்சி நிதியின் மூலம் அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அரசே நேரடியாக ஏலத்தில் பங்கேற்று பட்டுக்கூடைகளை கொள்முதல் செய்யும் சூழல் உருவானால், வியாபாரிகள் கூட அதிக விலைக்கு போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டு, அதன் பலன் நேரடியாக விவசாயிகளுக்கு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில், ராசிபுரம் பட்டுக்கூடு அங்காடி தர்மபுரி போன்ற பகுதிகளில் உள்ள மையங்களைப் போல புகழ்பெற்ற சந்தையாக வளர்ச்சியடையும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தை செயல்படுத்த உதவிய முதலமைச்சர், துணை முதலமைச்சர், பட்டு வளர்ச்சித் துறை அமைச்சர், இயக்குனர் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள், பொதுப்பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்..

இராசிபுரம் ஒன்றிய திமுக செயலாளர் கே பி ஜெகநாதன், முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் சேகர் (எ) பெரியசாமி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சத்தியசீலன், திமுக வழக்கறிஞர் அணி கண்ணன், கூனவேலம் பட்டி சரவணன், மற்றும் பட்டுக்கூடு விவசாயிகள், வியாபாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நெல்லை வந்த முதல்வருக்கு 3 இடங்களில் வெகு உற்சாகமான சிறப்பான வரவேற்பு!

## நெல்லை மாவட்ட பொறுப்பாளர்கள் இரா.ஆவுடையப்பன், மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. – ம.கிரகாம்பெல் தலைமை! 20,000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

நெல்லை, பிப்.26-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நெல்லையில் 3 இடங்களில் மிகவும் உற்சாகமான சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பாளை கே.டி.சி நகர் மற்றும் ரவுண்டானா ஆகிய பகுதிகளில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டம் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.ஆகியோர் தலைமையிலும், பணகுடி நான்கு வழிச்சாலையில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையிலும் வரவேற்பு அளிக்கப் பட்டது.இதில் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 20,000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு விமானம் மூலமாக வந்தார்கள்.

பின்னர் முதலமைச்சர் அவர்கள் அங்கிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக கார் மூலம் புறப்பட்டார்கள்.கன்னியாகுமரி செல்லும் வழியில் நெல்லை மாவட்ட எல்லையான பாளை கே.டி.சி. நகர்,அதனை அடுத்து ரவுண்டானா பகுதியில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.ஆகியோர் தலைமையில் மிகவும் உற்சாகமான,எழுச்சியான சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சாலையின் இருபுறமும் கழகக் கொடி தோரணங்கள் அமைக்கப்பட்டது. சாலையின் இருபுறமும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் சுமார் 10,000 க்கும் மேற்பட்டோர் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் உற்சாகமான வரவேற்பை ஏற்று காரில் இருந்து கீழே இறங்கி சாலையின் இருபுறமும் பெண்கள் கொடுத்த வரவேற்பை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.முதலமைச்சர் அவர்களுக்கு பெண்கள் தங்களின் முழு ஆதரவை மனநிறைவுடன் தெரிவித்தனர்.

அதன் பின்னர் நெல்லை கிழக்கு மாவட்டம் பணகுடி நான்கு வழி சாலையில் முதலமைச்சர் அவர்களுக்கு கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் தலைமையில் வெகு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப சீதாராமன், முன்னாள் அமைச்சர்கள் டி.பி.எம். மைதீன் கான்,பூங்கோதை ஆலடி அருணா, முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் மாலை ராஜா,ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், மாநில நிர்வாகிகள் ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார் ஆதித்தன்,பெருமாள், விஜிலாசத்யானந்த்,மேயர். ராமகிருஷ்ணன்,துணைமேயர் ராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பிரபாகரன், பேச்சிபாண்டியன்,சித்திக்,

மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,மைக்கேல்,தமிழ்ச்செல்வன்,தமயந்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் கணேசன்,அபுபக்கர்,ராமச்சந்திரன், ரவிச்சந்திரன்,கதிர்வேல் முருகன் பரம சிவ அய்யப்பன், கனகராஜ், நடராஜன், மாநகர பொறுப்பாளர்கள் சுப்பிர மணியன்,தினேஷ்,தொகுதி பார்வையாளர்கள் ஜோசப்ராஜ், சிவராஜ்,

முன்னாள் எம்பி ஞானதிரவியம்,ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர்,ஜெகன், முத்துகிருஷ்ணன்,செல்லதுரை, சமுத்திரபாண்டியன்,சிவகுமார், குமார், சிவன் பாண்டியன்,பொன்.செல்வன்,மாரி வண்ணமுத்து,அன்பழகன், மாரியப்பன், அருள்மணி, மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட், உலகநாதன்,கந்தன் கோகுலவாணி மற்றும் வல்ல நாடு முத்து உள்பட கழக நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் சுமார் 20000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் கீழ்நிலத்தூர் ஊராட்சியில் ரூபாய் 13.30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடையை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்கள் வழங்கி இதனைத் தொடர்ந்து போலிவாக்கம் ஊராட்சியில் டி.எல்.சி. பகுதியில் உள்ள ஆட்டோ ஓட்டுனர் 50 பேருக்கு சீருடை வழங்கினார் உடன் மாவட்ட அவைத் தலைவர் கே. திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் கா. அரிகிருஷ்ணன், கூளூர் எம். ராஜேந்திரன், பிரகாஷ்ஞானஒளி, நிர்வாகிகள் வக்கீல் பி.கே.நாகராஜ், நந்தகோபால், சி. ஆர். குமரன், கொப்பூர் திலீப் குமார், பாலசுப்பிரமணியம், எல்லப்பன், மோகனசுந்தரம், அசோக் குமார் ராம்கி, கார்த்திக், ஜானகிராமன், சுதாகர், ராமன், அரவிந்த், மகேஷ் குமார், ரவி,உள் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்